<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேலூர்</u>

<u>முன்னிலை: திரு.பொ. மகாராஜன்.எம்.எல்.,</u>

<u>வாடகை கட்டுப்பாட்டாளர்/மாவட்ட உரிமையியல் நீதிபதி,</u>

<u>2026ம் வருடம் மார்ச் திங்கள் 27ம் நாள் வெள்ளிக்கிழமை</u>

<u>R.L.T.O.P.No. 11/2025</u>

<u>CNR Number : TNMD15-000251-2025</u>

--------

திருமதி. S. ரேவதி. ...மனுதாரர்

/எதிர்/

திருமதி.N.A.சுபைதா பேகம். ...எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக கடந்த 14.08.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R. ராஜேந்திரபிரசாத் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜராகாததால் அவர் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகளைக் கேட்டும், மனு ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் பரிசீலனைக்காக என் முன்பு இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

<u>உத்தரவு</u>

இம்மனுவானது, மனு தாவா சொத்திலிருந்து எதிர்மனுதாரரரை காலி செய்து தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கும்படி, உத்தரவிடக் கோரியும், செலவுத் தொகை கோரியும், மனுதாரரால் பிரிவு 21 (2) (a), 21 (2) (b) தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017-ன்படி, தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுவின் சுருக்கம்:-</u>

2.1) தாவா சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். ஆதியில் தாவா சொத்தானது தனலெட்சுமி என்ற லீலாவதி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு

பாகப்பிரிவினையின் மூலம் கிடைக்கப்பட்டு அனுபவித்து வந்தார். தாவா சொத்தை காலியிடமாக விளையாட்டு மைதானமாக வாடகைக்கு கொடுக்கப்பட்டது. மனுதாரர் தாவா சொத்தை 18.09.2000ம் தேதி ஆவண எண்.2135/2000—ன்படி, கிரையம் பெற்றுள்ளார்.

2.2) மனுதாரர் கிரையம் பெற்ற பிறகு எதிர்மனுதாரர் கடந்த ஜூலை 2001 முதல் டிசம்பர் 2002 வரை வாடகைப் பணம் ரூ.2,080/—யை மணியாடர் மூலம் அனுப்பி வைத்தார். ஆனால், எதிர்மனுதாரர் அக்டோபர் 2000 முதல் ஜூன் 2001 வரை வாடகை செலுத்தவில்லை. மேலும், ஜனவரி 2002 முதல் நாளது தேதி வரை வாடகை செலுத்தவில்லை. வேண்டுமென்றே எதிர்மனுதாரர்கள் வாடகை செலுத்தாமல் இருந்து வருகின்றார். மனுதாரர் தரப்பில் வாடகைப் பாக்கி பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதன்பின்னிட்டு வாடகைப் பாக்கி செலுத்தவில்லை. எதிர்மனுதாரர் கடந்த 23 ஆண்டுகள் 7 மாதங்கள் அதாவது, 292 மாதங்களுக்கு வாடகைப் பாக்கி செலுத்த வேண்டும். எதிர்மனுதாரர், மனுதாரரிடம் அனுமதி பெறாமல் ஓட்டு செட் போட்டுள்ளார். அதற்கு நகராட்சியில் அனுமதி பெறவில்லை.

2.3) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எழுத்து மூலமான வாடகை ஒப்பந்தம் எதுவும் இல்லை. தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017— நடைமுறைக்கு வந்த பின்பு எதிர்மனுதாரர் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள முன் வரவில்லை. எனவே, மேற்படி, சட்டம் நடைமுறைக்கு வந்த 90 நாட்களுக்குள் வாடகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்பதால் வாடகை ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததாக கருதப்பட வேண்டும்.

2.4) மனுதாரர் தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்பு, பொதுவான நபர் மூலமாக வாடகைப் பணத்தை கேட்டார். ஆனால், எதிர்மனுதாரர் பொய்யான தகவல்களுடன் O.S.NO.690/2004—வழக்கை தாக்கல் செய்தார். எனவே, எதிர்மனுதாரர் வாடகை பாக்கி வைத்துள்ளார் என்பதன் அடிப்படையிலும், தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017—

ன்படி, குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்யவில்லை என்ற அடிப்படையிலும், தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கக் கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மனுதாரர் தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்களுக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு சார்வு செய்யப்பட்ட பின்பும் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. எனவே, எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

04) .சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் :–

மனுதாரர் தரப்பில் திருமதி. S. ரேவதி என்பவர் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்–

இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரரால் பிரிவு 21 (2) (a) தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017–ன்படி, தாக்கல் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்கள் ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6. மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. தீர்வு

7.1) மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, தாவா சொத்தானது மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், ஆதியில் தாவா சொத்தானது தனலெட்சுமி என்ற லீலாவதி என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டு பாகப்பிரிவினையின் மூலம் கிடைக்கப்பட்டு அனுபவித்து வந்தார் என்றும், தாவா சொத்தை காலியிடமாக விளையாட்டு மைதானமாக வாடகைக்கு கொடுக்கப்பட்டது என்றும், மனுதாரர் தாவா சொத்தை 18.09.2000ம் தேதி ஆவண எண்.2135/2000–ன்படி, கிரையம் பெற்றுள்ளார் என்றும், மனுதாரர் கிரையம் பெற்ற பிறகு எதிர்மனுதாரர் கடந்த ஜூலை 2001 முதல்

டிசம்பர் 2002 வரை வாடகைப் பணம் ரூ.2,080/–யை மணியாடர் மூலம் அனுப்பி வைத்தார் என்றும், ஆனால், எதிர்மனுதாரர் அக்டோபர் 2000 முதல் ஜூன் 2001 வரை வாடகை செலுத்தவில்லை என்றும், மேலும், ஜனவரி 2002 முதல் நாளது தேதி வரை வாடகை செலுத்தவில்லை என்றும், வேண்டுமென்றே எதிர்மனுதாரர்கள் வாடகை செலுத்தாமல் இருந்து வருகின்றார் என்றும், மனுதாரர் தரப்பில் வாடகைப் பாக்கி பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், அதன்பின்னிட்டு வாடகைப் பாக்கி செலுத்தவில்லை என்றும், எதிர்மனுதாரர் கடந்த 23 ஆண்டுகள் 7 மாதங்கள் அதாவது, 292 மாதங்களுக்கு வாடகைப் பாக்கி செலுத்த வேண்டும் என்றும், எதிர்மனுதாரர், மனுதாரரிடம் அனுமதி பெறாமல் ஓட்டு செட் போட்டுள்ளார் என்றும், அதற்கு நகராட்சியில் அனுமதி பெறவில்லை என்றும், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் எழுத்து மூலமான வாடகை ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றும், தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017– நடைமுறைக்கு வந்த பின்பு எதிர்மனுதாரர் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள முன் வரவில்லை என்றும், எனவே, மேற்படி, சட்டம் நடைமுறைக்கு வந்த 90 நாட்களுக்குள் வாடகை ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்பதால் வாடகை ஒப்பந்தம் முடிவுக்கு வந்ததாக கருதப்பட வேண்டும் என்றும், மனுதாரர் தாவா சொத்தை கிரையம் பெற்ற பின்பு, பொதுவான நபர் மூலமாக வாடகைப் பணத்தை கேட்டார் என்றும், ஆனால், எதிர்மனுதாரர் பொய்யான தகவல்களுடன் O.S.NO.690/2004–வழக்கை தாக்கல் செய்தார் என்றும், மேற்படி, வழக்கின் வழக்குரையிலேயே தாவா சொத்தில் எதிர்மனுதாரர் வாடகைக்கு பயன்படுத்தி வருகிறார் என்ற விவரம் ஒப்புக் கொள்ளப்பட்டது என்றும், எனவே, எதிர்மனுதாரர் வாடகை பாக்கி வைத்துள்ளார் என்பதன் அடிப்படையிலும், தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017–ன்படி, குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்யவில்லை என்ற அடிப்படையிலும், தாவா சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கக் கேட்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனுதாரர் தரப்பில் இந்த மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

7.2) முதலாவதாக, மனுதாரர் தரப்பில் தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017– பிரிவுகள் 21 (2) (a) மற்றும் 21 (2) (b) –ன்கீழ் பரிகாரம் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7.3) தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017– பிரிவு 4–யை பரிசீலனை செய்து பார்க்கும்போது, கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Section 4: Tenancy Agreement

Notwithstanding anything contained in this Act or any other law for the time being in force, no person shall, after the commencement of this Act, let or take on rent any premises except by an agreement in writing, which shall be informed to the Rent Authority by the landlord and tenant jointly, in the form specified in the First Schedule.

(2) Where, in relation to a tenancy created before the commencement of this Act,-(a) an agreement in writing was already entered into, it shall be informed to the Rent Authority;(b) no agreement in writing was entered into, the landlord and the tenant shall enter into an agreement in writing with regard to that tenancy, and inform the Rent Authority, in the form specified in the First Schedule: Provided that where the landlord and the tenant fail to present jointly a copy of tenancy agreement under clause (a) or fail to reach an agreement under clause (b), such landlord and the tenant shall separately file the particulars about such tenancy.

(3) Every agreement referred to in sub-section (1) or required to be executed under sub-section (2) shall be in such manner and within such period as may be prescribed.

(4) The Rent Authority, after receiving such information about tenancy agreement, shall register the agreement and provide a registration number to the parties.

Section 21(2) (a).

–21. Repossession of the Premises by the Landlord.

(1) A tenant shall not be evicted during the continuance of tenancy agreement except in accordance with the provisions of sub-section (2).

(2) The Rent Court may, on an application made to it in the manner as may be prescribed, make an order for the recovery of possession of the premises on one or more of the following grounds, namely:-

(a) that the landlord and tenant have failed to agree to the rent payable under section 8;

(b) that the tenant has not paid the arrears in full of rent payable and other charges payable as specified in sub-section (1) of section 13 for two months, including interest for delayed payment as may be specified for in the tenancy agreement or as prescribed, as the case may be, within one month of notice of demand for the arrears of such rent and all charges payable being served on him by the landlord in the manner provided in sub-section (4) of section 106 of the Transfer of Property Act, 1882 (Central Act 4 of 1982):Provided that no order for eviction of the tenant on account of default of payment of rent shall be passed, if the tenant makes payment to the landlord or deposits with the Rent Court all arrears of rent including interest within one month of notice being served on him: Provided further that this relief shall not be available again, if the tenant defaults in payments of rent consecutively for two months in any one year subsequent to getting relief once;

(c) that the tenant has, after the commencement of this Act, parted with the possession of whole or any part of the premises without obtaining the written consent of the landlord;

(d) that the tenant has continued misuse of the premises even after receipt of notice from the landlord to stop such misuse. Explanation. - For the purpose of this clause, "misuse of premises" means encroachment of additional space by the tenant or use of premises which causes public nuisance or causes damage to the property or is detrimental to the interest of the landlord or for an immoral or illegal purposes;

(e) that the premises or any part thereof are required by the landlord for carrying out any repairs or building or rebuilding or additions or alterations or demolition, which cannot be carried out without the premises being vacated: Provided that the re-entry of the tenant after such repairs, building, rebuilding, addition, alteration or demolition shall be allowed only when it has been mutually agreed to between the landlord and the tenant and the new tenancy agreement has been submitted with the Rent Authority: Provided further that re-entry of the tenant shall not be allowed in the absence of such mutual agreement submitted with the Rent Authority and also in cases where the tenant has been evicted under the orders of the Rent Court;

(f) that the premises or any part thereof are required by the landlord for carrying out any repairs, building, rebuilding, additions, alterations or demolition, for change of its use as a consequence of change of land use by the competent authority;

(g) that the premises let for residential or non-residential purpose are required by the landlord for occupation for residential or non-residential purposes for himself or for any member of his family or for any person for whose benefit the premises were held and the landlord or such person is not in possession of any suitable accommodation within the same urban area;

(h) that the tenant has given written notice to quit and in consequence of that notice, the landlord has contracted to sell the accommodation or has taken any other step, as a result of which his interests would seriously suffer if he is not put in possession of that accommodation.

(3) In any proceedings for eviction under clause (e) of sub-section (2), the Rent Court may allow eviction from only a part of the premises, if the landlord is agreeable to the same.

7.4) மேற்படி, சட்டப்பிரிவின்படி, பார்க்கும்போது, இந்த சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தால் 575 நாட்களுக்குள் கட்டிட உரிமையாளர் மற்றும் வாடகைதாரர் எழுத்து மூலமாக பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தம் பிறப்பித்துக் கொள்ள வேண்டும் என்றும், அவ்வாறு பிறப்பித்துக் கொள்ள தவறினால் பிரிவு 21(2)(அ)–ன் கீழ் மேற்கண்ட வாடகை ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டுவர இந்த சட்டத்தின்கீழ் கட்டிட உரிமையாளரோ, அல்லது வாடகைதாரரோ மனு தாக்கல் செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7.5) இந்த வழக்கில் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாடகைக்கு பயன்படுத்தி வருகிறார் என்ற விவரம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட O.S.No.690/2004–வழக்கில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளபட்சத்தில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களுக்கு இடையில் மனு தாவா சொத்தைப் பொறுத்து பிரிவு 4(2)–ன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தம் இல்லாத காரணத்தினால் மேற்கண்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரிவு 21(2)(a)–ன்கீழ் மனுதாரரால் பரிகாரம் கோர முடியும் என்பது தெரிய வருகிறது.

7.6) மேலே கண்டவற்றின் அடிப்படையில், பரிசீலனை செய்து பார்க்கும்போது, மனு சொத்தைப் பொறுத்து மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையில் பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தம் இல்லை என்பது தெரிய வருவதால் மனு தாவா சொத்தை எதிர்மனுதாரர், மனுதாரரிடம் ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

7.7) அடுத்ததாக, தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017– பிரிவு 21 (2) (b) –ன்கீழ் பரிகாரம் கோரியுள்ளது சம்பந்தமாக பரிசீலனை செய்யப்படுகிறது.

7.8) மனுதாரர் தரப்பில் வாடகைப் பாக்கி வைத்திருந்தார் என்ற காரணத்திற்காக எதிர்மனுதாரர் தாவா சொத்தை காலி செய்ய வேண்டும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், இந்த வழக்கை பொறுத்தமட்டில் தமிழ்நாடு உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் கட்டுப்பாட்டுச் சட்டம் 2017–ன்கீழ் வாடகை ஒப்பந்தமே பதிவு செய்யப்படவில்லை என்பதால் பிரிவு 21 (2) (b) –ன்கீழ் இந்த மனுவில் மனுதாரருக்கு எந்தவொரு பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

முடிவாக, இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனு சொத்தைப் பொறுத்து மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையில் பதிவு செய்யப்பட்ட வாடகை ஒப்பந்தம் இல்லை என்பது தெரிய வருவதால் மனு தாவா சொத்தை எதிர்மனுதாரர், மனுதாரரிடம் ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்று இந்த நீதிமன்றம் முடிவு கண்டுள்ளதன் அடிப்படையில், மனுச் சொத்தினை எதிர்மனுதாரர் காலி செய்து அதன் சுவாதீனத்தை மனுதாரர் வசம் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.03.27 19:07:50 +0530

வாடகை கட்டுப்பாட்டாளர்/மாவட்ட உரிமையியல் நீதிபதி
மேலூர்

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் –</u>

1. திருமதி. S. ரேவதி

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

| <u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u> | <u>தேதி</u> | <u>ஆவண விபரம்</u> | <u>குறிப்பு</u> |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | ---------- | அசல் வழக்கு எண்.690/2004 பிராது. | நகல். |
| ம.சா.ஆ.2 | ---------- | வழக்கறிஞர் அறிவிப்பு. | கையிருப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | நகல். |
| ம.சா.ஆ.3 | 08.07.2025 | அஞ்சலக இரசீது. | அசல் |
| ம.சா.ஆ.4 | 10.07.2025 | அஞ்சலக ஒப்புகை அட்டை. | அசல். |
| ம.சா.ஆ.5 | 18.09.2000 | கிரையப் பத்திரம் (ஆவண எண்.2135/2001) | சான்றிட்ட நகல். |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் – இல்லை.</u>
<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்–இல்லை.</u>

MAHARAJAN PONNAMBALAM

Digitally signed by MAHARAJAN PONNAMBALAM
Date: 2026.03.27 19:07:57 +0530

வாடகை கட்டுப்பாட்டாளர்/மாவட்ட உரிமையியல் நீதிபதி
மேலூர்

மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், மேலூர்
R.L.T.O.P.No.11/2025
சீரான/வரைவு உத்தரவு.
நாள் 27–03–2026